

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (04.10.2024) சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் முதலமைச்சர் கோப்பை 2024 மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை சுடர் ஏற்றி தொடங்கி வைத்து முதலமைச்சர் கோப்பையினை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர், பெரியசுருப்பன், மின்சாரம் மற்றும் மது விலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி விளையாட்டு வீராங்களை துளசிமதி முருகேசன், விளையாட்டு வீரர் பிரவீன் சித்ரவேல், தடகள சங்கத் தலைவர் தேவாரம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இந்திய விளையாட்டுத் துறையின் தலைநகராக

# தமிழ்நாட்டை உருவாக்குவோம், களம் நமதே!

## முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

**சென்னை, அக்.6-**

**சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில், கழக அரசு சார்பில் நடத்தப்பட்டு வரும், 'முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்-2024'-இன் மாநில அளவிலான போட்டிகளை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**

**இதையொட்டி, மாவட்ட வாரியாக வீரர், வீராங்கனையர் நடத்திய அணிவகுப்பு மற்றும் கலைநிகழ்ச்சிகளைக் கண்டு ரசித்து, வீரர்கள் - கலைஞர்களை வாழ்த்திப் பேசினார்.**

தமிழ்நாடு முழுவதும் இருந்து 5 பிரிவுகளில் பல்லாயிரக்கணக்கான வீரர் - வீராங்கனையர் பங்கேற்கும் இந்த மாநில அளவிலான போட்டிகள், சர்வதேச மற்றும் தேசிய அளவிலான சாதனையாளர்களை உருவாக்குவது உறுதி என அப்போது அவர் குறிப்பிட்டார்.

அவரது உரை வருமாறு:

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2024-இன் மாநில அளவிலான போட்டிகளை, இன்று உங்கள் முன்னிலையில் தொடங்கி வைப்பதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

தமிழ்நாடு முழுவதிலும் இருந்து, இங்கே மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்துள்ள உங்களையெல்லாம் பார்க்கும்போது, உங்களுக்குள் இருக்கும் அதே உற்சாகம் என்னையும் தொற்றிக் கொள்கிறது.

### முதல் கையெழுத்து

துணை முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்ற பிறகு, நான் கையெழுத்திட்ட முதல் கோப்பு, இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிக்கானதுதான். இதற்கான நிதியை 82 கோடி ரூபாயாக உயர்த்துவதற்கான கோப்பில்தான் முதல் கையெழுத்திட்டேன் என்பதை, இங்கே பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சிறப்புக்குரிய நிகழ்வுக்கு, இரண்டு முக்கியமான வீரர்கள் வந்து இருக்கிறார்கள். மாற்றுத்திறன் பேட்மிட்டன் வீராங்கனையான சகோதரி துளசி முருகேசன் அவர்கள் இங்கு வந்து இருக்கிறார். சமீபத்தில், நடைபெற்ற பாரீஸ் பாரா ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று இந்தியாவுக்கும், நம் தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடி தந்தவர்தான் தங்கை துளசிமதி முருகேசன். வேர்ல்டு பாரா சாம்பியன் சிப்-2024-இல் பெண்களுக்கான இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்று கொடுத்தார்.

### வெண்கலப் பதக்கம்

ஏசியன் பாரா கேம்ஸ்-2023-இல் ஒன்றையர் பிரிவில் தங்கப்பதக்கம், இரட்டையர் பிரிவில் வெள்ளி, மிக்ஸ்ட் டபுள் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று, சாதனைப் படைத்தவர்தான் தங்கை அவர்கள். விளையாட்டில் சாதிப்பதற்கு தடை எதுவும் இல்லை என்று பதக்கங்களைக் குவித்து வரும் தங்கை துளசிமதிக்கு பாரா ஒலிம்பிக்கில் வெள்ளி வென்றதற்காக, நம் கழக அரசு நம் முதலமைச்சர் அவர்கள் இரண்டு கோடி ரூபாய் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கி, பெருமைப்படுத்தினார்.

திருவாரூரைச் சேர்ந்த தம்பி பிரவீன் சித்திரவேலும் இங்கே வருகை தந்திருக்கிறார். ட்ரிப்பிள் ஜம்ப் பிரிவில் யூத் ஒலிம்பிக்ஸ், ஏசியன் இண்டோர் சாம்பியன்சிப், ஏசியன் கேம்ஸ் - 2023, ஒலிம்பிக்ஸ் - 2024, காமன்வெல்த் கேம்ஸ் போன்ற தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பல்வேறு பதக்கங்களை வென்றவர்தான் தம்பி பிரவீன் சித்திரவேல் அவர்கள். தம்பி பிரவீன் அவர்களுக்கும் ரூபாய் 27 லட்சம் அளவிற்கு, நம் கழக அரசு சார்பாக, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயரிய ஊக்கத்தொகை வழங்கி இருக்கிறார்கள்.

### பாராட்டுகள் வாழ்த்துகள்

துளசிமதி, பிரவீன் இருவருமே இன்றைக்கு ஏராளமான வீரர்களுக்கு முன்மாதிரியாகத்



திகழ்ந்து வருகிறார்கள். இவர்களின் போட்டி மற்றும் பயிற்சிக்காக நம் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் `எலைட்' திட்டத்தின் கீழ் தலா 30 லட்சம் ரூபாய் நம் கழக அரசு சார்பாக, நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கிக்கொண்டு இருக்கிறார். இருவருக்கும் அனைவரின் சார்பாக பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு சிறப்பு இருக்கும். ஒவ்வொரு துறையில், ஒவ்வொரு மாநிலமும் சிறந்து விளங்கும். ஆனால், இந்தியாவிலேயே அத்தனை துறைகளிலும் சிறந்து விளங்குகின்ற மாநிலம் எதுவென்றால், அது நம் தமிழ்நாடுதான்.

குறிப்பாக, விளையாட்டுத்துறையில் தமிழ்நாடு செய்கின்ற சாதனைகள் மகத்தானவை. அதற்கு, ஒரு சின்ன உதாரணம்தான் இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்.

### முதலமைச்சர் கோப்பை

இப்போட்டிக்காக சென்ற ஆண்டு 3 லட்சத்திற்கும் அதிகமான விளையாட்டு வீரர்கள் பதிவுசெய்து, இந்தப் போட்டியில் பங்கேற்றார்கள்.



ஆனால், இந்த ஆண்டு கிட்டத்தட்ட 11 லட்சத்து 53 ஆயிரம் பேர் முன்பதிவு செய்து இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று இருக்கிறார்கள்.

பள்ளி, கல்லூரி மாணவர்கள், அரசு ஊழியர்கள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் என்று எல்லாத் தரப்பிலிருந்தும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கிறார்கள். இத்தனை லட்சம் பேர் அரசு நடத்துகின்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கிறார்கள் என்றால், அந்த விளையாட்டுப் போட்டியினை நம் துறை அவ்வளவு சிறப்பாக, வெளிப்படைத் தன்மையாக நடத்தி வருகிறது என்பதற்கு, ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

### 82 கோடி ரூபாய் ஒதுக்கீடு

அதனால்தான், இந்த ஆண்டு, நம் முதலமைச்சர் அவர்கள் போட்டிகளை நடத்த 82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார். இந்த விளையாட்டுப் போட்டிக்கான பரிசுத்தொகை மட்டுமே 37 கோடி ரூபாய் என்பதை, இங்கு பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியாவிலேயே இத்தனை கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து வருடம்தோறும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துகின்ற ஒரே மாநிலம் நம் தமிழ்நாடு மட்டும்தான்.

உங்களின் கோரிக்கைகளை ஏற்று, இந்த வருடம் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கேன்ட் பால், கேரம், செஸ், பென்சிங், ஜூடோ, பாக்சிங், கொக்கோ, டிராக் சைக்கிளிங், ஜிம்னாஸ்டிக்ஸ், ஸ்குவாஷ் போன்ற புதிய விளையாட்டுகளையும், போட்டிகளையும் இந்த ஆண்டு சேர்த்து இருக்கிறோம்.

### உங்களின் கனவுகள்

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வந்திருக்கின்ற நீங்கள் அத்தனைப்பேரும், இன்றைக்கு தமிழ்நாட்டின் வரலாற்றில் இணைந்து இருக்கிறீர்கள். விளையாட்டினை நம்பி, `களம் நமதே' என்று புறப்பட்டு வந்துள்ள உங்களின் கனவுகள் வெல்ல, நம் திராவிட மாடல் கழக அரசு என்றைக்கும் துணை நிற்கும்.

விளையாட்டு வீரர்களுக்குத் துணை நிற்கின்ற வகையில் ஏராளமான நடவடிக்கைகளை நம் அரசு எடுத்து வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் 33 வகையான விளையாட்டுகளுக்குத் தேவையான கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளோம். இந்தத் திட்டத்தின் கீழ், இதுவரை நானே நேரில் சென்று, 23 மாவட்டங்களுக்கு இந்த ஸ்போர்ட்ஸ் கிட்டை வழங்கி இருக்கிறேன்.

தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையைத் தொடங்கி, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நூற்றுக்கும் அதிகமான வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகை வழங்கி வருகிறோம். விளையாட்டுத் துறையில் சாதிக்கின்ற வீரர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையும் வழங்கிக்கொண்டு இருக்கிறோம்.

### மாற்றுத் திறனாளி வீரர்கள்

எலைட், சி.டி.எஸ், எம்.ஐ.எம்.எஸ் போன்ற திட்டங்கள் மூலமாக விளையாட்டு வீரர்களுக்கு நிதி வழங்கி, ஊக்குவிக்கின்ற மாநிலமாக நம் தமிழ்நாடு விளங்குகிறது. `மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கான பொற்காலம்' என்று நம் கழக ஆட்சியைச் சொல்லலாம். சமீபத்தில், பாரீஸில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்காக தமிழ்நாட்டில் இருந்து தங்கை துளசிமதி உட்பட ஆறு மாற்றுத் திறனாளி வீரர்கள் சென்றார்கள். அவர்களுக்கு தலா 7 லட்சம் ரூபாயை விளையாட்டுப் போட்டிக்குச் செல்வதற்கு முன்பாகவே ஊக்கத்தொகையாகக் கொடுத்து, நம் முதலமைச்சர் அவர்கள் அழைத்து, ஊக்கப்படுத்தி அனுப்பினார்கள்.

சென்றவர்கள் 6 பேர். 6 பேரில் 4 பேர் பதக்கங்களோடு திரும்பி வந்து தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் பெருமை சேர்த்தார்கள். அவர்களுக்கு ஐந்து கோடி ரூபாய் அளவிற்கு நம் முதலமைச்சர் அவர்கள் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கினார்கள். இதேபோல, `பிடே செஸ் ஒலிம்பியாட்' போட்டியில் தங்கம் வென்ற இந்திய அணியில் இடம்பெற்ற நம் தமிழ்நாட்டு வீரர்கள் குகேஷ், பிரக்ஞானந்தா, வைஷாலி, ஸ்ரீநாத் நாராயணன் போன்ற வீரர்களுக்கும் நம் முதலமைச்சர் அவர்கள் மொத்தமாக, ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உயரிய ஊக்கத்தொகையை வழங்கினார்.

### உலகமே பார்த்து வியந்தது!

ஒரு பக்கம் நம் வீரர்கள் சர்வதேச அளவில் சாதனை படைத்துக்கொண்டு இருக்க இன்னொரு பக்கம் பல்வேறு சர்வதேசப் போட்டிகளை நடத்தி, நம் அரசு சாதனைப் படைத்துக்கொண்டு இருக்கிறது. அதற்கு ஒரு சின்ன உதாரணம்தான் அண்மையில் நீங்கள் எல்லாம் பார்த்து ரசித்த சென்னை பார்முலா-4 கார் பந்தயம். தெற்கு ஆசியாவிலேயே முதன் முறையாக நடைபெற்ற அந்தப் போட்டியை இந்த உலகமே பார்த்து வியந்தது, பாராட்டியது.

அதுமட்டுமில்லாமல், கேலோ இந்தியா யூத் கேம்ஸ், சென்னை செஸ் கிராண்ட் மாஸ்டர்ஸ்-2024, ஏசியன் கப் ஹாக்கி, தேசிய ஹாக்கி கோப்பைக்கான போட்டிகள், ஸ்குவாஷ் வேர்ல்டு கப், வேல்டு சர்பீங் லீக், சைக்களத்தான் இப்படி நாம் நடத்திய போட்டிகள் ஏராளம்.

இந்தச் சாதனைப் பயணம் எப்போதும் தொய்வின்றி தொடர இங்கு வந்திருக்கின்ற உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் மிக முக்கியம். நீங்கள் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமல்ல, எதிர்காலத்தில் பல தேசிய, மாநில அளவிலான போட்டிகளிலும் விளையாடப் போகின்ற, எதிர்கால நம் நாட்டின் வீரர்கள். எனவே, உங்கள் அத்தனை பேருக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் போட்டிகளை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கின்ற எஸ்.டி.ஏ.டி உள்ளிட்ட அரசு

> **“துணை முதல்வராகப் பொறுப்பை ஏற்ற பிறகு, நான் கையெழுத்திட்ட முதல் கோப்பு, இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிக்கானதுதான். இதற்கான நிதியை 82 கோடி ரூபாயாக உயர்த்துவதற்கான கோப்பில்தான் முதல் கையெழுத்திட்டேன் என்பதை, இங்கே பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.”**

அதிகாரிகள், அலுவலர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள், தன்னார்வலர்கள் உட்பட்ட ஆறாயிரம் பேரை இந்த நேரத்தில் பாராட்டி, வாழ்த்தி மகிழ்கிறேன்.

இந்திய ஒன்றிய விளையாட்டுத் துறையின் தலைநகராக தமிழ்நாட்டை உருவாக்குவோம். களம் நமதே!

இறுதிப் போட்டியில் வெல்லும் உங்களைப் பரிசளிப்பு விழாவில் மீண்டும் சந்திக்கிறேன். வாய்ப்புக்கு நன்றி. வணக்கம்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, கே.ஆர். பெரியகருப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, பி. மூர்த்தி, வி.செந்தில் பாலாஜி, சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், கலாநிதி வீராசாமி, சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, விளையாட்டு மேம்பாட்டுத்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., சட்டமன்ற உறுப்பினர்கள் சுதர்சனம், ஆர். டி.சேகர், ப.தாயகம் கவி, எம்.கே.மோகன், இ. பரந்தாமன், வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், வை.முத்துராஜா, ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, ஜே.ஜே. எபினேசர், சென்னை மாநகரத் துணை மேயர் மகேஷ்குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., பாரீஸ் பாரா ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற தமிழ்நாட்டு வீராங்கனை துளசிமதி முருகேசன், பல்வேறு சர்வதேச தடகளப் போட்டிகளில் பதக்கம் வென்றுள்ள வீரர் பிரவீன் சித்திரவேல், தமிழ்நாடு அத்லெட்டிக் அசோசியேஷன் தலைவர் தேவாரம், அரசு அதிகாரிகள் அலுவலர்கள், உள்ளாட்சி நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.